மேயர் பிரியா பங்கேற்பு! துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில்

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் பி.கே.சேகர் பாபு பயனாளிகளுக்கு தீர்வு ஆவணங்கள் வழங்கினார்!





சென்னை,ஆக.21-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 5 வார்டு 57 க்குட்பட்ட கன்னிகா பரமேஸ்வரி கல்லூரி வளாகத்தி நேற்று (20.8.2025) புதன் கிழமை நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளின் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், எஸ் முரளி, பி. ஸ்ரீ ராமுலு எம் சி, அபரஞ்சி,ஏ பி பூர்ணிமா எம் சி, வட்டக் கழக செயலாளர்கள் பா. அண்ணாதுரை,ஜி. ராம மூர்த்தி, மற்றும் 57 வது வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், தாழம்பூர் ஊராட்சியில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சான்றிதழ்களை வழங்கினார். அருகில் ஒன்றியக்குழு தலைவர் எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புச்செழியன், பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

பொதுமக்களின் உடல் - மன அச்சுறுத்தலை ஏற்படுத்தும்

# நாய்கள் உரிமையாளர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை!

## சென்னை மாநகராட்சி எச்சரிக்கை!

சென்னை,ஆக.21-

பெருநகர சென்னை மாநகராட்சியில் வளர்ப்பு நாய்கள் பொது மக்களை தாக்கும் சம்பவங்கள் குறித்த புகார்கள் வருகின்றன. செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் கட்டாயம் பெருநகர சென்னை மாநகராட்சியின் உரிமம் பெற்றிருக்க வேண்டும். செல்லப்பிராணிகளுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தியும், முறையாக உணவு, தண்ணீர் மற்றும் இருப்பிடம் முதலியவற்றை வழங்கி பராமரிக்கவும், பொது இடங்களுக்கு அழைத்து செல்லும் பொழுது கழுத்துப்பட்டையுடன் சங்கிலி இல்லாமல் கொண்டு செல்வதை கண்டிப்பாக தவிர்க்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் நாய்களை வீடுகள், தெருக்கள், பூங்காக்கள் மற்றும் மக்கள் கூடும் பொது இடங்களில் முகமூடி இன்றி திரியவிட்டாலோ / அழைத்து சென்றாலோ உரிமையாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அவ்வாறான நாய்கள் மற்றும் செல்லப்பிராணிகள் மீது இந்திய பிராணிகள் நல வாரியம் (Animal Welfare Board of India) வெளியிட்டுள்ள வழிகாட்டுதலின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

பொது மக்களுக்கு அச்சம் மூட்டும் வகையில் ஆக்ரோஷமான தன்மை கொண்ட நாய்களை வளர்க்க கூடாது. மேலும் பொது இடங்களுக்கு ஒரே நேரத்தில் ஒரு செல்லப்பிராணியை மட்டுமே அதன் உரிமையாளர்கள் எடுத்து செல்ல வேண்டும். ஏற்கனவே குறிப்பிட்டுள்ளவாறு அந்த செல்லப் பிராணியை அழைத்து செல்லும் பொழுது மற்றவர்கள் பாதுகாப்பை கருதி அதன் வாயை மூடியிருக்க (Muzzle) செய்தும், கட்டாயம் கழுத்துப்பட்டையுடன் சங்கிலியால் கட்டி வைத்திருக்கவும் வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் உரிமம் மற்றும் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி செலுத்தப்பட்ட நாய்கள் மட்டுமே வெளியிடங்களுக்கு அழைத்து செல்ல அனுமதிக்கப்படும்.

விலங்குகளின் நடவடிக்கைகள் நன்கு அறிமுகமான மனிதர்கள் மற்றும் அதன் இருப்பிட சூழ்நிலையில் இயல்பு நிலையிலும் மற்ற இடங்களில் மாறுபட்டும் இருக்க்க் கூடும். இதனை உரிமையாளர்கள் உணர்ந்து கொண்டு பொறுப்புணர்வுடன் பிறருக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் இவற்றை வளர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது. பொது இடங்கள் , அடுக்கக குடியிருப்புகளின் மின்தூக்கிகள் (Lift) ஆகியவற்றில் மிகுந்த பாதுகாப்போடும் , மற்றவர்களுக்கு அச்ச மூட்டும் வகையிலோ (அ) அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையிலோ நாய்களின் நடவடிக்கைகள் இல்லாதிருப்பதை உறுதி செய்ய வேண்டியது உரிமையாளர்களின் பொறுப்பாகும். இந்திய பிராணிகள் நல வாரியம் (Animal Welfare Board of India) வெளியிட்டுள்ள வழிகாட்டுதலின்படி (Guidelines with respect to Pet Street Dogs and their care givers and for Residents Welfare Associations and Apartment Owners Associations இந்த விதிகளை கட்டாயம் கடைபிடிக்க வேண்டுமென வலியுறுத்துகிறது.

இதனை மீறி உரிமம் பெறாமல் மற்றும் ஆபத்து ஏற்படும் வகையில் வெறித்தன்மை. பதற்றம் மற்றும் துரத்தி கடிக்கும் தன்மையுள்ள நாய்களை அந்த செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள், அவற்றை பொது இடங்களில் பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் திறந்துவிட்டால் அவ்வாறான நாய்கள் மீது இந்திய பிராணிகள் நல வாரியம் (Animal Welfare Board of India) வெளியிட்டுள்ள வழிகாட்டுதலின் படியும், பொது மக்களின் உடல் / மன அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நாய்களின் உரிமையாளர்களின் மீது உரிய குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின்படியும் நடவடிக்கைக்கு உள்ளாவார்கள் என கடுமையாக எச்சரிக்கப்படுகிறது.

3 கோடியே 80 லட்ச ரூபாய் மதிப்பீட்டில்

# ஆவடி மாநகராட்சி பகுதியில் பல்வேறு திட்டப் பணிகள்!

## அமைச்சர் ஆவடி சாமு.நாசர் தொடங்கி வைத்தார்

திருவள்ளூர் ஆக 21;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதியில் ஆவடி சட்டமன்ற நிதி மற்றும் பொதுநிதிலிருந்து 3கோடியே 80 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணி தொடக்க விழா மற்றும் புதிய கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு திருப்ப விழா நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு ஆவடி மாநகராட்சி 36 வது வார்டில் பருவ மழை நீர் கால்வாய் தூர் வாருவதை துவக்கி வைத்து , 37, வது வார்டு ஆவடி மாநகராட்சி பழுதடைந்த சாலைகளை சீரமைத்தல் பணி சேக்காடு உரக்கிடங்கில் சுற்றுச்சூழல் அமைத்தல் பணி 18 வது வார்டு சி.டி.எச்.சாலையில் காந்திநகர் பேருந்து நிறுத்தத்தில் புதிய பேருந்து நிழற்குடை அமைக்கும் பணி 4 வது வார்டில் சி.ஆர்.பி.எச். நகரில் புதிய நூலக கட்டுதல் பணி, புதிய ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி

5 வது வார்டில் கன்னடபாளையம் மங்கள நகர் பேருந்து நிறுத்தத்தில் புதிய பேருந்து நிழற்குடை அமைக்க பணிகளை அடிக்கல் நாட்டில் தொடங்கி வைத்தார்

இதனைத் தொடர்ந்து 22 வது வார்டில் புதிய அமுதம் நியாய விலைக் கடை கட்டிடம்

15 வது வார்டு நேரு நகரில் உள்ள தொடக்கப் பள்ளியில் புதிய கூடுதல் இரண்டு வகுப்பறை கட்டிடம்

15 வது வார்டு சாஸ்திரி நகர் பால விநாயகர் கோவில் தெருவில் புதிய ரேஷன் கடை கட்டிடம்,

24 வது வார்டில் சிந்தாமணி ரேஷன் கடை புதிய கட்டிடத்தையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து இனிப்புகள் வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் சரண்யா, ஆவடி பகுதி கழக பொறுப்பாளர் சண் பிரகாஷ், ஆவடி பகுதி கழக செயலாளர்கள் பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், மண்டல குழு தலைவர்கள் வி.அம்மு, நா.ஜோதிலட்சுமி, ஆவடி மாநகராட்சி பணிக்குழு தலைவர் சா.மு.நா.ஆசிம் ராஜா, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் யாஸ்மின் பேகம் , தங்கவேல், போ.ரமேஷ், பார்த்திபன், க.ரமேஷ்பாபு, சுகன்யா சதீஷ்குமார், கு.சேகர், சே. ராஜலிங்கம், முனிசாமி, செண்பகவல்லி ரவிச்சந்திரன் , கிருஷ்ணமூர்த்தி, ஜான், வி.சிங்கரம், பி.பி. பெருமாள் உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கண்மணி நெடுஞ்செழியன் தலைமை!

# மேல் மலையனூரில் கலைஞர் கனவு இல்லத் திட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஆக. 21 -

மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டம் மற்றும் முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமான திட்டத்தின் கீழ் 55 நபர்களுக்கு 1.44 கோடிரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கும், வீடுகள் புனரமைப் பதற்கான உத்தரவினையும், சமையல் உதவியாளர்கள் நிலையிலிருந்து சமையலராக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பணி ஆணைகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு வழங்கினார். ஒன்றியப் பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமானத் திட்டத்தில் வீடுகள் புனரமைப்பதற்கும், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கான உத்தரவுகள் மற்றும் மேல் மலையனூர் ஒன்றியத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் சமையல் உதவியாளர்நிலையிலிருந்து சமையலராக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பணி ஆணை கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மேல்மலையனூர் ஒன்றியப் பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

வட்டார கல்விக் குழுத் தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார் .வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெயசங்கர் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.கலந்து கொண்டுமேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் சமையல் உதவியாளர்கள் நிலையிலிருந்து சமையலர்கள்பதவி உயர்வு பெற்றதற்கான பணி ஆணைகளை வழங்கினார். தொடர்ந்து முதலமைச்சரின் வீடுகள் மறுக்கட்டுமான திட்டத்தின் கீழ் 44 நபர்களுக்கு 1 கோடியே 5 லட்சத்தி 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ்11 நபர்களுக்கு 38 லட்சத்தி 50 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 1 கோடியே 44 லட்சத்தி 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான உத்தரவினை அவர் வழங்கி சிறப்புரை யாற்றினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி, துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர் சீதாலட்சுமி,ஒன்றிய கவுன்சிலர்கள் ரவிச்சந்திரன், ராஜா, சிவசக்தி, ஊராட்சி மன்றத் தலைவர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கலா அனைவருக்கும் நன்றி கூறினார்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஐம்பதாவது திருமண நாளை முன்னிட்டு, மாத்தூர் 19 ஆவது வட்டத்தில் அமைந்துள்ள ஆதரிக்கும் கரங்கள் குழந்தைகள் காப்பகத்தில் வசிக்கும் குழந்தைகளுக்கு புத்தாடைகள், கல்வி உபகரணங்கள் மற்றும் அறுசுவை பிரியாணி வழங்கப்பட்டது. 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு,பி.நிர்மல் குமார், எஸ். உதயகுமார், பி. துரைசாமி, துளசி, கதிரவன்,ஜி. ராஜேஷ் கண்ணன், எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், சுகாசினி, பெரியநாயகி, கஸ்தூரி, சரஸ்வதி, அத்திகுளம் தேவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

மேயர் பிரியா பங்கேற்பு! கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில்

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் பி.கே.சேகர் பாபு பயனாளிகளுக்கு தீர்வு ஆவணங்கள் வழங்கினார்!





சென்னை,ஆக.21-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 6 வார்டு 70 க்குட்பட்ட பந்தர் கார்டன் மாநகராட்சி பள்ளியில் நேற்று (20.8.2025) புதன் கிழமை நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக

மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்..11 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 250 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 54 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி -25 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணபப்ங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 14 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 102 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் - - 356 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 3 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -22 விண்ணப்பம்

பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை -1419 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் -100

என மொத்தமாக 2651 மனுக்கள் பெறப்பட்டு அதில் 2637 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், சரிதா மகேஷ் குமார் எம் சி, சி.ஸ்ரீ தணி எம் சி, அமுதா பொன்னி வளவன் எம் சி,ஏ பி பூர்ணிமா எம் சி, வட்ட கழக செயலாளர்கள் பா அன்பரசு பி சந்திரசேகர் மற்றும் 70 வது வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் வடக்கு ஒன்றிய கழக விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளராக நியமனம் செய்யப்பட்ட ஜோதி நகர் கிளைக் கழக செயலாளர் கே .ஏ .டி .அன்பு திருப்போரூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளரும் ஒன்றிய குழு பெருந்தலைவரும் சட்டமன்றத்தின் முன்னாள் உறுப்பினருமான எஸ். ஆர் .எல் . இதய வர்மன் அவர்களை சந்தித்து மலர் மாலை அணிவித்து வாழ்த்து பெற்றார். உடன் ராஜா பெருமாள் மோகன் நடராஜ், ஷர்மா, ஷான், ரமேஷ், மருது, ராம்நாத், நவீன், கீர்த்திவாசன், பெர்லின் ,மற்றும் கழகத் தோழர்கள் உடன் இருந்தனர்.